British Tamils Forum

Tamil House, Unit 1,
Fountayne Business Centre,
Broadlane, Tottenham,
London, N15 4AG
Tel: +44 (0)208 808 0465
Email:admin@tamilsforum.com
www.tamilsforum.com

27.05.2010

# தென்னிந்திய தமிழ் திரையுலகினருக்கு பிரித்தானிய தமிழர் பேரவை பாராட்டு

**V.C. GUHANATHAN,**
President,
Film Employees Federation of South India (FEFSI)
No.30, Jawharlal road/100, feed road, vadapalani, chennai 600 026.
Tamilnadu India

**Mr. Radha Ravi**
Secretary
South Indian Film Artiste's Association
16, Habibullah road, Padma shehastri road, T nagar, Chennai 600 017.

**Mr. Rama Narayanan**
President,
Tamil Film Producers Council,
606 Anna Salai,
Greams Road, Chennai 600 006.

வணக்கம்,

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் எதிர்வரும் ஜுன் மாதம் 4,5,6ஆம் நாட்களில் நடைபெறவுள்ள பன்னாட்டு இந்திய திரைப்பட விழாவைப் புறக்கணிப்பதாக, தமிழ் திரையுலகம் எடுத்திருக்கும் முடிவுக்கு பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்ற வகையில் 'பிரித்தானிய தமிழர் பேரவை' தனது உளமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

ஈழத்தில் கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் சனவரி முதல் மே வரை ஐந்து மாதங்கள் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரில் 40,000 வரையிலான அப்பாவிப் பொதுமக்கள் சிறீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக, போர் காலத்தில் இலங்கையில் கடமையாற்றியிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கோர்டன் வைஸ் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் இந்தத் தொகை இதனைவிட அதிகமாக அல்லது இரட்டிப்பாக இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்னணி பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களான பன்னாட்டு சர்ச்சைகள் குழு (International Crisis Group -ICG), பன்னாட்டு மன்னிப்புச் சபை (Amnesty International ), மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch ) போன்றன கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதில் பன்னாட்டு சர்சசைகள் குழுவின் தலைவியாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் (Louise Arbour) அம்மையார் இருப்பதுடன், இவர் பதவியில் இரந்தபோது பல போர்க்குற்ற விசாரணைகளை முன்னின்று நடத்தியதுடன், தனது பதவிக் காலத்தில் ஈழத்திற்குச் சென்று நேரில் நிலமைகளை அவதானித்த ஒருவராக இருக்கின்றார்.

இவை தவிர ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் நாயகம் பான்-கி மூன், சிறீலங்கா அரசின் எதிர்ப்பு, மற்றும் நேரில் விடுக்கப்பட்ட வேண்டுகையை மீறி, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைக் குழுவொன்றை அமைக்கும் தனது முடிவில் மாற்றம் இல்லை என கடந்த சில நாட்களுக்கு முன்னர் அறிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், தமது போர்க் குற்றங்களை மூடி மறைக்கும் வகையில் கொழும்பில் பன்னாட்டு இந்திய திரைப்பட விழாவை நடத்த சிறீலங்கா அரசு மிகுந்த பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது.

சிறீலங்கா அரசின் கபடத்தனத்தை நன்கு புரிந்துகொண்டும், ஆறாத மாறாத ரணங்களாக கனன்று கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களின் மனங்களுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் வகையிலும் இந்த விழாவில் கலந்துகொள்வதில்லை என தமிழ் திரையுலகம் எடுத்திருக்கும் முடிவை பிரித்தானிய தமிழர் பேரவை வெகுவாக வரவேற்கின்றது.

இதே நிலைப்பாட்டை இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலுள்ள இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி போன்ற திரைப்படத்துறையினர் குறிப்பாக வட இந்திய முன்னணி நட்சத்திரங்கள் எடுப்பதற்கு தென்னிந்திய திரையுலகம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும், பன்னாட்டு இந்திய திரைப்பட விழாவை கொழும்பில் இருந்து இடம்மாற்றி வேறு இடத்தில் நடத்துவதற்கான ஒழுங்கினை மேற்கொள்ள தங்களால் இயன்றளவில் செயலாற்ற வேண்டும் எனவும் உரிமையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஈழத்தில் இறுதிக்கட்ட இன அழிப்புப் போர் முன்னெடுக்கப்பட்டபோது தமிழ் திரையுலகம் கொதித்தெழுந்து உண்ணாநிலைப் போரராட்டம், மனித சங்கிலிப் போராட்டம், ஊர்வலங்கள் போன்ற பல போராட்டங்கள் நடத்தியதையும், தமிழ்நாட்டு உறவுகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அரசுக்கு அழுத்தம் கொடுத்ததையும் நாம் இந்த நேரத்தில் நினைவுபடுத்துவதுடன், தங்களின் தார்மீகக் கடமை தொடருவதையும் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

கொழும்பில் நடைபெறும் பன்னாட்டு இந்திய திரைப்பட விழாவைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ள கீழுள்ள சங்கங்களை உள்ளடக்கிய தென்னிந்திய திரையுலகைச் சேர்ந்த இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், சின்னத்திரைக் கலைஞர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், திரையரங்க உரிமையாளர்கள், வர்த்தக சங்கத்தினர், விநியோகஸ்தர்கள், திரைத்துறைத் தொழிலாளர்கள், திரையுலக ஊடகவியலாளர்கள் மற்றும் அனைவருக்கும் ஈழத்தமிழ் மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை
தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம்
தென்னிந்திய நடிகர் சங்கம்
தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம்
தமிழ்நாடு திரைப்பட இயக்குனர்கள் சங்கம்
தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பு
தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கம்
சின்னத்திரைக் கலைஞர்கள் சங்கம்
தென்னிந்திய திரைப்படப் பத்திரிகைத் தொடர்பாடல் சங்கம்

நன்றி.

**பிரித்தானிய தமிழர் பேரவை சார்பாக,**

**சு.ஸ்கந்ததேவா**